


# அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் நிலை அறிதல்

## நெறியாளரின் சுய மதிப்பீட்டு அறிக்கை

மார்ச் 2022


<u>ஒருங்கிணைப்பு</u>

*அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்*

*வான்முகில்*

# அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களின் நிலை அறிதல்; நெறியாளரின் சுய மதிப்பீட்டு அறிக்கை

**படி நிலை 1:** நெறியாளர்கள் தங்கள் மன்றங்களின் நிலையை தாங்களே சுயமாக மதிப்பீடு செய்யும் வாய்ப்பினை அரசமைப்பு உரிமைக் கல்வித்திட்டம் அளித்தது.

**படி நிலை 2:** இதற்காக சுய மதிப்பீட்டுப் படிவம் (கூகுள் படிவமாக) தயார் செய்யப்பட்டு வாராந்திர நெறியாளர்கள் கூட்டத்தில் சமர்பிக்கப்பட்டு நெறியாளர்களின் ஆலோசனையின் படி படிவம் இறுதி செய்யப்பட்டது.

**படி நிலை 3:** இப்படிவத்தை அனைத்து இயக்குனர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அவர்களது ஒப்புதல் பெறப்பட்டது.

**படி நிலை 4:** இப்படிவத்தை பூர்த்தி செய்யும் பணியினை அந்தந்த நெறியாளர்கள் மேற்கொண்டனர்.

**படி நிலை 5:**
பூர்த்தி செய்வது தொடர்பாக தொடர்ந்து நினைவூட்டல் அளிக்கப்பட்டது.

**படி நிலை 6:**
பூர்த்தி செய்வது தொடர்பாக தொடர்ந்து நினைவூட்டல் அளிக்கப்பட்டது.


**படி நிலை 7:**
பல முறை அறிவிப்பிற்குப் பின், பூர்த்தி செய்யும் நிலை முடிக்கப்பட்டு ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டது.


# சுய மதிப்பீடு செய்த மன்றங்கள்

| வ. எண் | அமைப்பு | சுய மதிப்பீடு செய்த மன்றங்கள் | நிலுவை |
|---|---|---|---|
| 1. | தோழமை | 10 | 0 |
| 2. | தூண்டில் மாணவர் இயக்கம் | 10 | 0 |
| 3. | ஹோப் நிறுவனம் – புதுச்சேரி | 10 | 0 |
| 4. | TRRM | 10 | 0 |
| 5. | இந்தோ அறக்கட்டளை | 10 | 0 |
| 6. | ரியல் அறக்கட்டளை | 10 | 0 |
| 7. | பவர் அறக்கட்டளை | 10 | 0 |
| 8. | ஹோப் நிறுவனம் – கடலூர் | 05 | 0 |
| 9. | வான்முகில் - விருதுநகர் | 09 | 01 |
| 10. | வான்முகில் - திருநெல்வேலி | 08 | 02 |
| 11. | அலைகுடி மக்கள் சமூக பாதுகாப்பு சங்கம் | 07 | 03 |
| 12. | சுடர் | 04 | 06 |
| 13. | சைல்டு வாய்ஸ் | 04 | 06 |
| மொத்தம் | | 107 | 18 |

# ஒவ்வொரு மன்றக் கூட்டத்திலும் குழந்தைகளின் பங்கேற்பு விழுக்காடு?

(கடைசியாக நடைபெற்ற 5 கூட்டங்களின் சராசரி வருகையை கவனத்தில் கொண்டு பதில் அளிக்கவும்)







# கூட்டம் நடைபெறும் இடம்?







# மன்றத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள்?




# பதிவேடுகள் பராமரிக்கப்படும் விதம்?

- மிகச் சிறப்பு (9 - 10)
- சிறப்பு (7 - 8)
- திருப்தியாக (5 - 6)
- கவனம் தேவை (3 - 4)
- சரியில்லை (1 - 2)




மன்றத்திற்கு வழங்கப்பட்ட பெயர்ப் பலகை (Flex Banner) மையத்தில் உள்ளதா?




மையம் அமைந்துள்ள பகுதியில் பெயர்ப் பலகை (Flex Banner) நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ளதா?

- ஆம்
- இல்லை




# மன்றத்திற்கு வழங்கப்பட்ட "வெள்ளை நிற எழுது பலகை" (White Board) மன்றத்தில் உள்ளதா?

- ஆம்
- இல்லை




"வெள்ளை நிற எழுது பலகை" (White Board) பயன்பாட்டில் உள்ளதா?

- ஆம்
- இல்லை



மன்றத்திற்கு வழங்கப்பட்ட "மூன்று வகையான விழிப்புணர்வு ஒட்டிகள்" (Stickers) மையம் செயல்படும் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளதா?


- ஆம்
- இல்லை



# வான்முகில் வழங்கிய விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் இம்மன்றத்தில் உள்ளதா?

**(முகப்புரை, உறுதிமொழி, குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை, கோவிட் விதிமுறைகள்)**


- ஆம்
- இல்லை
- பொருந்தாது (துண்டுப்பிரசுரங்கள் மன்றத்திற்கு கிடைக்கவில்லை எனில்)



# இந்த விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் பற்றி குழந்தைகளுக்கு தெரிந்துள்ளதா?

(முகப்புரை, உறுதிமொழி, குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை, கோவிட் விதிமுறைகள் - IEC)


- ஆம்
- இல்லை
- பொருந்தாது (துண்டுப்பிரசுரங்கள் மன்றத்திற்கு கிடைக்கவில்லை எனில்)




# மன்ற தொடக்க விழாவின் போது வழங்கப்பட்ட, நான்கு வகையான பேனர்கள் மன்றத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா?

(முகப்புரை, உறுதிமொழி, குழந்தை பாதுகாப்புக் கொள்கை, கோவிட் விதிமுறைகள்)

- ஆம்
- இல்லை
- பொருந்தாது (பேனர்கள் மன்றத்திற்கு கிடைக்கவில்லை எனில்)




# வான்முகில் வழங்கிய "மன்ற விதிமுறைகளும் வழிகாட்டு நெறிமுறைகளும்" கையேடு மன்றத்தில் உள்ளதா?




- ஆம்
- இல்லை
- பொருந்தாது (கையேடு மன்றத்திற்கு கிடைக்கவில்லை எனில்)


# வான்முகில் வழங்கிய "இந்திய குடிமக்களாகிய நாம்" பாடநூல் மன்றத்தில் உள்ளதா?

- ஆம்
- இல்லை
- பொருந்தாது (பாடநூல் மன்றத்திற்கு கிடைக்கவில்லை எனில்)




# வான்முகில் வழங்கிய "வாண்டுகள் பயணம்" பாடநூல் மன்றத்தில் உள்ளதா?

- ஆம்
- இல்லை
- பொருந்தாது (பாடநூல் மன்றத்திற்கு கிடைக்கவில்லை எனில்)




# "இந்திய குடிமக்களாகிய நாம்" பாடநூல் மன்றத்தில் நடத்தப்பட்டுள்ளதா?





- ஆம்
- இல்லை

# 25.03.2022 வரை, "இந்திய குடிமக்களாகிய நாம்" பாடநூலில் எந்தெந்த பாடங்கள் நடத்தப்பட்டுள்ளன?




"வாண்டுகள் பயணம்" பாடநூல் மன்றத்தில் நடத்தப்பட்டுள்ளதா?




ஆம்


இல்லை

# 25.03.2022 வரை, "வாண்டுகள் பயணம்" பாடநூலில் எந்தெந்த பாடங்கள் நடத்தப்பட்டுள்ளன?




மன்ற விதிமுறைகள் கையேட்டில் உள்ளவாறு, மன்றத்தில் ஒருங்கிணைப்பாளர் தேர்வு செய்யப்பட்டுள்ளாரா?

- ஆம்
- இல்லை




# மன்றக் கையேட்டில் உள்ளவாறு, மன்றத்தில் துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதா?

ஆம்
இல்லை




# ஆம் எனில்,




கல்வி & விழிப்புணர்வுக் குழு
39 (66.1%)
குழந்தை உரிமைக் கண்காணிப்புக் குழு
34 (57.6%)
இதர
18 (30.5%)
0
10
20
30
40

# வான்முகில் வழங்கிய சான்றிதழ்கள் மன்றத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதா?





- ஆம்
- இல்லை

# இதுவரை இம்மன்றக் குழந்தைகள் (நேரில் / இணையவழியில்) பங்கேற்பு செய்த நிகழ்வுகள்?




# மன்றத்தின் வளர்ச்சியில் மன்றக் குழந்தைகளின் பெற்றோர் பங்களிப்பு உள்ளதா?




- ஆம்
- இல்லை

# நெறியாளர்களுக்கான வாராந்திர இணையவழிக் கூட்டத்தில் இம்மன்றக் குழந்தைகள் பங்கேற்றுள்ளனரா?

- ஆம்
- இல்லை



# இம்மன்றக் குழந்தைகள் முன்னெடுத்த சிறப்பு முயற்சிகள்?

1. அனைவரையும் சமமாக கருத வேண்டும், சாதி பாகுபாடு யாரிடமும் காட்டக்கூடாது என்ற கண்ணோட்டம் ஏற்பட்டுள்ளது.
2. மன்ற நிகழ்வுகள் அனைத்தையும் குழந்தைகளே முன்னின்று சிறப்பாக நடத்தும் திறன் படைத்தவர்களாக மாறியுள்ளனர்.
3. தனது உரிமை குறித்த தலையீடு, கேள்வி கேட்கும் திறன், ஊராட்சி அலுவலர், கிராம நிர்வாக அலுவலர், மாவட்ட ஆட்சியர் சந்திப்பு, அடிப்படை தேவைகள் குறித்தும், விளையாட்டு மைதானம், நூலகம், சாலை வசதி, பேருந்து வசதி கேட்டு CRE மன்றம் சார்பில் மனு அளித்தல்.
4. சமத்துவ பொங்கல் விழாவை குழந்தைகளே முன்னின்று நடத்தினர்கள்
5. மன்றத்தில் குழந்தை உரிமை கண்காணிப்பு குழு மூலம் குழந்தைகளின் பிரச்சினைகளை தீர்க்க புகார் பெட்டியை வைத்துள்ளார்கள்.
6. கிராமத்தில் உள்ள பிரச்சினைகளை கண்டறிவது
7. SMC பிரச்சாரம்
8. குழந்தை திருமணம் இல்லாத கிராமத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். இளம் வயது திருமணத்தை தடுத்தல்
9. கிராம சபை கூட்டத்தில் பங்கேற்றது
10. இந்திய குடிமக்களாகிய நாம் என்ற பாடநூலில் உள்ள ஏக்கங்கள் பாடத்தின் பயிற்சியின் அடிப்படையில் இரண்டு குழந்தைகள் கவிதைகள் எழுதியுள்ளனர்.
11. பள்ளிகளில் நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்க முன் வந்துள்ளார்கள்.
12. மன்றத்திற்கும் பள்ளிக்கும் சரிவர வராமல் இருந்த மாணவி சுசிவர்தினியை மன்றக் குழந்தைகளே அவர்கள் பெற்றோரிடம் பேசி வரவைத்தனர்.
13. மரக் கன்று நடுதல்
14. தான் கற்ற கல்வியினை மற்ற குழந்தைகளுக்கும் கற்று கொடுத்தல்
15. பகுதி வரைபடம் வரைந்தனர். பயம் இல்லாமல் காவலரிடம் இப்பகுதியில் உள்ள பிரச்சனைகளை அவர்களே முன் எடுத்து பேசினர்

# இம்மன்றக் குழந்தைகளின் செயல்களால் ஏற்பட்டத் தாக்கம் / வெற்றிக் கதைகள்?

1. யாரிடமும் பாகுபாடு காட்டுவது இல்லை. அனைவரும் சமம் என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. BC,SCA,MBC, முஸ்லிம் குழந்தைகள் அனைவரும் ஒற்றுமையாக உள்ளனர்.
2. மன்றக் குழந்தைகளுக்கு தைரியம் ஏற்பட்டுள்ளது.
3. ஓவியம். விளையாட்டு போன்றவற்றில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது
4. குழந்தை திருமணத்தை தடுத்துள்ளனர்.
5. மன்றக் குழந்தைகள் முன்வைத்த கோரிக்கையை ஏற்று, நூலகம் அமைத்து தருவதாக சொல்லி இடம் ஒதுக்கி உள்ளனர்.
6. குழந்தைகளின் பெற்றோர்கள் குழந்தைகளின் பாதுகாப்புக்காக மன்றத்தின் வெளியில் CCTV வைத்து உள்ளர்கள்.
7. சிலம்பம் பயிற்சியில் சுத்தமல்லி மன்றக் குழந்தைகளை ஈடுபடுத்தியதன் விளைவாக, மாவட்ட அளவிலான சிலம்பம் விளையாட்டில் பரிசு வென்றனர்.
8. குழந்தைகள் உரிமை குறித்த புரிதல்
9. ஊரை சுற்றி பார்க்க செல்லும் போது நமது பகுதியில் முக்கியமான அரசு கட்டிடம் இல்லை என்ற புரிதல். அடிப்படை வசதிகள் இல்லை என்ற புரிதல்

9. குழந்தைகள் மன்றத்தில் கற்றுக்கொண்டதை அவர்களுடைய நண்பர்களுக்கும் கூறி அவர்களையும் இந்த மன்றத்திற்கு அழைத்து வருகிறார்கள்.
10. குழந்தைகள் இருக்கும் இடம் சுத்தமாக வைத்துக் கொள்வது
11. அனைத்து குழந்தைகளும் பள்ளிக்கு செல்கிறார்கள்
12. மன்றக் குழந்தைகள், கிராம சபை கூட்டத்தில் மனு கொடுத்ததன் விளைவாக தெரு சாக்கடை சரி செய்யப்பட்டது.
13. பஞ்சாயத்து தலைவரிடம் மன்றக் குழந்தைகள் விளையாட்டு மைதானம் கேட்டதால், விளையாட்டு மைதானத்தை சரி செய்து கொடுத்துள்ளனர்.
14. மன்றக் குழந்தைகள் அரசு பள்ளியில் உள்ள “மனசு பெட்டி”யில் புகார் எழுதிப் போட்டுள்ளனர். ஆசிரியர் இதற்கு தீர்வு கிடைக்கும் என்று பதிலளித்துள்ளார்.
15. ஏக்கங்கள் பற்றி மற்றவர்களிடம் பேசி தெரிந்துக் கொள்கின்றனர்.தற்போது அவர்களின் ஏக்கம் என்னவென்று அவர்களின் பெற்றோர்களிடம் கூறுகின்றனர்
16. மன்றக் குழந்தைகள் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுத்துள்ளனர்.
17. தலைமை பண்பு வளர்ந்து உள்ளது

# மன்றக் கூட்டத்தை நடத்துவதில் உள்ள பிரச்சனைகள் / சவால்கள்?

1. வெளியூர் சென்று படிக்கிறார்கள். குழந்தைகள் பள்ளி விடுதியில் தங்கி இருக்கிறார்கள், குழந்தைகள் மைசூருக்கு வேலைக்கு சென்று உள்ளார்கள்.
2. சரியான இடம் கிடைக்காமல் அடிக்கடி இடத்தை மாற்ற வேண்டியுள்ளது.
3. பொதுவான இடத்தில் நடத்த முடியவில்லை பக்கத்தில் NH சாலை உள்ளது
4. குழந்தைகளுக்கு ஏற்பட்ட பெரும் கற்றல் இழப்பால், நடத்திய பாடத்தை குழந்தைகளிடம் திரும்பக் கேட்டால் சொல்லத் தெரியவில்லை. அதுவே எங்களது சவாலாக இருக்கிறது.
5. எங்கள் ஊரில் பள்ளிக்கூடம் இல்லாததால் 3 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள நிலக்கோட்டைக்கு தினமும் சென்று வருவதால் மன்ற குழந்தைகளால் தொடர்ந்து முழுமையாக கலந்து கொள்ள இயலவில்லை. மேலும் மன்ற கூட்டம் நடைபெறும் இடம் திறந்தவெளியாக இருப்பதால் பெண் குழந்தைகளால் முழுமையாக பங்கேற்க இயலவில்லை.
6. பெண் குழந்தைகள் பருவம் அடைந்தால் 45 நாட்கள் வெளியே விடுவதில்லை, ஆண்குழந்தைகள் வர விரும்புவதில்லை. குழந்தைகள் விரும்பும் சுற்றுலா தேவைகளை நிறைவேற்றனும்.
7. இல்லம் தேடி கல்வி நடப்பதால் குழந்தைகள் குறைவாகவே கலந்து கொள்கிறார்கள்.
8. பாடத்தில் உள்ள வார்த்தைகளுக்கு அர்த்தம் புரிய வைப்பதில் பிரச்சினை.
9. பள்ளி துவங்கிவிட்டதால் நம் நிகழ்ச்சிகளை கொண்டு செல்ல நேரம் போதவில்லை
10. 1RSS தலையீடு
11. மன்றம் செல்வதற்கு பேருந்து வசதி இல்லை. ஆட்டோவில் தான் செல்கிறேன். மாலை நேரத்தில் செல்வதால் 12 முதல் 15 குழந்தைகளை வருகை புரிகின்றனர். ஏழு மணிக்கு மேல் தான் வீடு திரும்பும் நிலை உள்ளது. அந்த நேரத்தில் ஆட்டோ வசதியும் இல்லை.

# மன்றம் சிறப்பாக நடைபெற நெறியாளரின் எதிர்பார்ப்புகள் / ஆலோசனைகள்?


1. விளையாட்டு பொருட்கள். விளையாட்டு உபகரணங்கள் தேவை
2. பள்ளியில் நடத்த அனுமதி வேண்டும்
3. அடிக்கடி அறிவு திறன் அதிகரிக்கும் விளையாட்டு போட்டிகள் வைத்து பரிசு வழங்கினால் குழந்தைகள் உற்சாகமாக மன்றத்திற்கு வருவார்கள்.
4. மன்றத்துக்கு நிரந்தர இடம் தேவை
5. குழந்தைகளை சுற்றுலா அழைத்துச் செல்லாம்
6. கதை புத்தகங்கள், பாடல் வழியாக சொல்லி கொடுக்கும் புத்தகங்கள் மன்றதுக்கு கொடுத்தால் நன்றாக இருக்கும்
7. TLM மூலம் கற்பித்தால் இன்னும் எளிதில் புரிந்து கொள்வர். வாண்டுகள் பயணம் இந்திய குடிமக்களாகிய நாம் பாடப்புத்தகங்களின் கையேடுகளை குழந்தைகளுக்கும் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

6. தார்ப்பாய் விரிப்பு கொடுத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.
7. குழந்தைகள் நிறைய புத்தகங்கள் வாசிக்க வேண்டும். சிறு நூலகம் தேவை.
8. நெறியாளர் கற்றுக்கொடுக்கும் பாடத்தை குழந்தைகள் குறிப்பெடுக்க அவர்களுக்கு நோட்டுகள் கொடுத்தால் நன்றாக இருக்கும்
9. குழந்தைகளின் அறிவுதிறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள்
10. குழந்தைகளை கவரும் விதமாக கற்றல் கற்பித்தல் துணைக் கருவிகள் மூலம் கற்பித்தால் எளிதில் புரிந்து கொள்வர்.

# இம்மன்றத்தின் ஒட்டுமொத்த செயல்பாடுகளை கருத்தில் கொண்டு, நெறியாளரின் மதிப்பீடு?

(பாரபட்சமின்றி மதிப்பீடு செய்க)

- மிகச் சிறப்பு (9 - 10)
- சிறப்பு (7 - 8)
- பரவாயில்லை (5 - 6)
- இன்னும் கவனம் தேவை (3 - 4)
- மிக மந்தமான நிலை (1 - 2)



# <u>ஆய்வரிக்கைத் தொகுப்பு</u>

**கா.கணேசன்**

# ஒருங்கிணைப்பு

## அரசியலமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

## வான்முகில்

திருநெல்வேலி